<u>**கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்**</u>

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் தேதி வியாழக்கிழமை

<u>**முதன்மை பதிவேட்டு வழக்கு எண்.08/2026**</u>

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
மருவத்தூர் காவல் நிலையம்,
குற்ற எண்.132/2023 ... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1. வீராசாமி, வயது 60/2023
த/பெ.வீரன்,

2. செல்லபாப்பு, வயது 55/2023,
க/பெ. வீராசாமி,

3. ராஜா, வயது 32/2023
த/பெ. வீரசாமி,

<u>எதிரிகளின் முகவரி,</u>
அருந்ததியர் தெரு,
கொளத்தூர் கிராமம்,
ஆலத்தூர் தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

... எதிரிகள்

இந்த வழக்கு 02.02.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை கூடுதல் வழக்குரைஞர், பெரம்பலூர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

1. எதிரிகள் ஒன்றுகூடி திட்டமிட்டு, மாரியம்மாளை கொலை செய்துவிட வாய்ப்பை உற்று நோக்கியிருந்தபோது அவர்கள் திட்டத்தை செயல்படுத்துமாறு, எதிரி சுரேஷ்–க்கு தக்க அறிவுரை கூறவும், எதிரி சுரேஷ் என்பவர் வீராசாமி, செல்லபாப்பு,

RESHMA
Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.25 18:42:06 +0530

ராஜா ஆகிய எதிரிகளுடன் தீட்டிய திட்டத்தை நிறைவேற்றிவிட எண்ணி செயல்பட்டு அதன் அடிப்படையில் மாரியம்மாளை அவரது ஆதார்கார்டில் திருத்தம் செய்வதற்காக அவரே அழைத்ததன்பேரில் 15.06.2023 ஆம் தேதி மதியம் தனது TN 64 H 3289 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தில் பின்னால் மாரியம்மாளை உட்கார வைத்து அழைத்துக்கொண்டு ஆலத்தூர் வட்டாட்சியர் அலவலகம் செல்வதற்கு ஆலத்தூர் நோக்கி கொளத்தூர் கொளக்காநத்தம் சாலையில் கொளத்தூர் சுந்தரமூர்த்தி கோவில் கொளக்காநத்தம் மசூதி கொளக்காநத்தம பெட்ரோல் பங்க் கொளக்காநத்தம் பஸ் ஸ்டாப் AKR பாரத் கேஸ்சிலிண்டர் குடோன் வழியாக அயினாபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் சென்றுகொண்டிருந்த போது இதன் சாட்சி சதாசிவம் என்பவர் விசாரிக்க, அவரிடம் எதிரி சுரேஷ் தான் மாரியம்மாள் ஆதார்கார்டில் அட்ரஸ் மாத்த போவதாக தெரிவித்தும் அதனை தொடர்ந்து பேருந்து நிறுத்தம் அடுத்து வடக்குபுறமாக செல்லும் மண் ஒத்தையடிப்பாதையில் இருசக்கர வாகனத்தில் மாரியம்மாளை அழைத்துக்கொண்டு ஏற்கனவே தீட்டப்பட்ட சதி திட்டத்தின்படி மாரியம்மாளை கொலை செய்து பெட்ரோல் ஊற்றி எறித்துவிட வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் சென்றபோது மாரியம்மாள் சற்று சுதாரித்து எதிரி சுரேஷ் தன்னை கொலை செய்துவிடுவானோ என்ற பயத்தில் தன்னை பாதுகாத்துக்கொள்ள முற்பட்டு வாகனத்தில் இருந்து குதித்து தப்பிச்செல்ல முற்பட்டு ஓடியவரை தடுத்து நிறுத்தி கைகளால் கண்ணத்தில் தாக்கியும் அவரிடம் உன்னை கொலை செய்ய போகிறேன் என்று கொலை மிரட்டல் விடுத்து உயிர் பயத்தை ஏற்படுத்தியும் அவர் அணிந்திருந்த தங்க நகைகளை கழற்றி கொடுக்க சொன்னதன் பேரில் உயிர் பயத்தின் காரணத்தால் கழற்றி கொடுத்ததை பறித்துக்கொண்டும் அதே இடத்தில் கிடந்த ஒரு கல்லை எடுத்து சாகும் வரை கல்லால் தலையின் இருபுறங்களிலும் மாரி மாரி தாக்கி கொலை செய்தும் இறந்துவிட்டாரா என்பதை உறுதி செய்து கொலை செய்துள்ளார் என்றும் பின்னர் தடயத்தை மறைக்கும் நோக்கில் சம்பவ இடத்தில் ஏற்கனவே கிடந்த ஒரு பிளாஸ்ட்டிக் வாட்டர் பாட்டிலை எடுத்து அதில் தனது இருசக்கர வாகனத்தில் இருந்து பெட்ரோலை நிரப்பி அருகில் கிடந்த சருகுகள் மற்றும் காய்ந்த குச்சிகளை பொறுக்கி எடுத்து இறந்துபோன மாரியம்மாள் பிரேதத்தின் மேல் போட்டும் பிளாஸ்ட்டிக் பாட்டிலில் வைத்திருந்த பெட்ரோலை அதன் மேல் ஊற்றி அவர் வைத்திருந்த தீப்பெட்டியில் இருந்து குச்சியை எடுத்து உராய்ந்து தீப்பிடித்ததும் அதனை போட்டு மாரியம்மாள் பிரேதத்தை

RESHMA
Judicial Magistrate,
Additional Mahila
Court
Digitally signed by
RESHMA
Location: Perambalur
Date: 2026.06.25
18:42:13 +0530

எறித்துள்ளார் என்றும் அருகில் இருந்து பிரேதம் எறிந்ததை கவனித்துக்கொண்டிருந்த போது யாரோ வருவதை அறிந்து அங்கிருந்து சென்று வாகனத்தை எடுக்கும் முன்பாக ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இதன் சாட்சியான முருகன் என்பவர் அங்கு எறிந்துகொண்டிருந்த தீயை பற்றி விசாரிக்க அதற்கு எதிரியானவர் தான் தண்ணியடித்துவிட்டு சிகிரெட் பற்ற வைத்து போட்டதால் தீ பிடித்துக்கொண்டதாக தெரிவித்தும் தனது வாகனத்தை எடுத்துகொண்டு பெரம்பலூர் வந்து தான் மாரியம்மாளிடம் இருந்து கொள்ளையடித்த நகைகளை பெரம்பலூர் சஞ்சீவிராயன்கோவில் தெருவில் உள்ள ஹீரா பேங்க் நகை அடகு கடையில் ஆனந்த் என்பவரிடம் கொடுத்து அதற்காக பணமாக ரூ.22,000/- மும் அதற்காக கடை ரசீது எண்.14120 பெற்றுக்கொண்டு தனக்கு தெரிந்த இடங்களில் இருசக்கர வாகனத்துடன் சுற்றிதிரிந்து பணத்தை செலவு செய்தும் தொடர்ந்து கொலைசெய்ய பயன்படுத்திய தனது இருசக்கர வாகனத்தை கீழப்பழூர் கிராமத்தில் பேருந்து நிறுத்தத்தில் உள்ள வாகன பாதுகாப்பகத்தில் நிறுத்தி அங்கு பணியில் இருந்த இதன் சாட்சி மாதவன் என்பவரிடம் வாகன சாவி மற்றும் டோக்கன் ஆகியவற்றை அவரது பாதுகாப்பிலேயே வைத்துக்கொள்ள ஒப்படைத்துள்ளார் என்றும் மாரியம்மாள் எதிரி சுரேசுடன் இருசக்கர வாகனத்தில் அடிக்கடி செல்வதாலே சுரேஷ்க்கும் மாரியம்மாளுக்கும் தவறான தொடர்பு இருக்குமே என்ற சந்தேகத்தில் சுரேஷின் மனைவிகள் பிரிந்து சென்றுள்ளார்கள் என்ற எண்ணத்திலேயே மாரியம்மாளை வீராசாமி, செல்லபாப்பு, ராஜா ஆகிய எதிரிகள் எதிரி சுரேசின் மூலம் சதி செய்து கொலை செய்ய தூண்டி கொலை செய்துள்ளார்கள் என்றும் எனவே இறந்துபோன எதிரி சுரேஷின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 109, 120(b), 363, 397, 302, 201 IPC -ன் கீழும் வீராசாமி, செல்லபாப்பு, ராஜா ஆகிய எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 109, 120(b), 302, 201 IPC-ன் கீழும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு குற்றமுறையிடுபவர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-இன் படி வழங்கப்பட்டது.

3. குற்றம் முறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களை பரிசீலித்துப் பார்க்கையில் இவ்வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டிய வழக்கு என்பதால் இந்த வழக்கை மேல்விசாரணைக்காக பெரம்பலூர்

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.25 18:42:19 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) இன்படி சமர்பித்து அனுப்பி வைக்கப்படுகிறது.

4. எதிரிகள் பெரம்பலூர், மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவின்படி பிணையில் இருந்து வருகின்றார்கள். எதிரிகள் வழக்கின் விசாரணையின் போதும் அது முடிவடையும் வரையிலும் தொடர்ந்து பிணையில் இருக்க கு.வி.மு.ச. பிரிவு 209(ஆ)–இன்படி அனுமதிக்கப்படுகிறது. மேலும் எதிரிகள் 23.07.2026 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு பெரம்பலூர், மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்கள் முன்பாக தவறாமல் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

5. வழக்கின் விசாரணையின் போதும் அது முடிவடையும் வரையிலும் எதிரிகளுக்கு வாதாட அமர்வு நீதிமன்றத்தில் ஒரு வழக்குரைஞரை வைத்துக்கொள்ள போதிய வசதி இருக்கிறதா? என்று வினவியபோது எதிரிகள் வழக்குரைஞரை வைத்துக் கொள்ள வசதி உள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

6. இவ்வழக்கின் பதிவுக்கட்டையும், சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய பத்திரங்கள் மற்றும் உருப்படிகள், ஆகியவற்றை கு.வி.மு.ச. பிரிவு 209(இ)–இன்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விரைவில் அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

7. இவ்வழக்கினை மேல் விசாரணைக்காக அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படுவது குறித்து அரசு குற்றத்துறை வழக்குரைஞர், பெரம்பலூர் அவர்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 209(ஈ)–இன்படி அறிவிப்பு ஒன்று அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டசருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர், 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

RESHMA

Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.25 18:42:24 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**குறிப்பு:-** இவ்வழக்கின் குற்றம் ஒப்பிய சான்றுரைஞர் எவரும் விசாரிக்கப்படவில்லை.

RESHMA

Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.06.25 18:42:30 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**நகல்கள்:-**

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், பெரம்பலூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. அரசுக் குற்றத்துறை வழக்குரைஞர், பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.